*கவனிக்க.- 2011.07.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1717 - 2011 ජුලි මස 29 වැනි සිකුරාදා - 2011.07.29

*1717 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 968 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 970 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 973 |
| ஏல விற்பனைகள் | 975 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2011, ஒகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மொணராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1-பல்லே வராதொல கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2012

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையை 2012, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2012, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் இலக்கம் 207 இல் பிரசுரிக்கப்பட்டதும், நடைமுறையிலுள்ள பொதுவிதிமுறைகளுக்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2011, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரித்து கீழ்க்குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்கான பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் கடித உறையின் இடது மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் எல்லா திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரதாரர்கள் தமது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் விற்கப்படும் தினமான 2011, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2011, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணியுடன் முடிவடையும். எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்கள் எவர் என அறிந்தவுடன் அன்றைய தினம் மு. ப. 12.00 மணிக்கு முன்பாக அக்கேள்விப்பத்திரதாரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக கணிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு குத்தகை நிபந்தனையில் கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2011, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி கேள்விப்பத்திரங்கள் விற்கமுடியாவிடின் 2011, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

ஆர். எம். ஜே. சீ. ரத்னாயக்க,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
12 யூலை, 2011.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரமும் மூடும் நேரமும் | வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொல கமேவெல | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 பி. ப. 4.00 மணி முதல் பி. ப. 8.00 மணிவரை | ரூ. 500 | 2011, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

7-769

---

## லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவின் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2012

2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2011.08.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த விண்ணப்பப்படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்று பத்திரத்துடன் பொறியிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுவதன் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்வி பத்திரப்படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2011.08.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகம் தரல் வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன் குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2011.10.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்வி பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவாகயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்து கொள்ளவேண்டிய வேறு விவரங்களை லுணுகலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
லுணுகலை,
2011.06.20.

**லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணை குத்தகை விற்பனை - 2012**
(01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரை)

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | பி. செ. பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படுகின்ற நேரம் | தவறணை மூடப்படுகின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கடைசி தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இல. 2-லுணுகலை | லுணுகலை | லுணுகலை பிரதேச சபையின் வட்டார இலக்கம் 2 வரிமதிப்பு இலக்கம் 219 கொண்ட குருவிக்கும்புரவத்த. | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி.ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூபா 5,000 | 24.08.2011<br>மு. ப. 10.30 |

மஹாதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச் சாலைக்கு 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட அதிகாரி 2011.08.24 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

7-641

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனி பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : அக்வான் மனேஜ்மென்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79363
கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி : 2011.06.10
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 07, இந்ரா மாவத்தை, களுபோவில

அக்வான் மனேஜ்மென்ட் லங்கா
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

7-655

---

## கம்பனி பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஆர். எம். ராஜகருணா அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79812
கம்பனி பதிவுசெய்யப்பட்ட திகதி : 2011.06.09
பதிவுசெய்யப்பட்ட விலாசம் : இல. 393/10, பிரிவு 1, லேக் றோட், அநுராதபுரம்

சீ. ஏ. எஸ். கோப்பரேட் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

7-656

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : புரொன்ட்டியர் ட்றேடிங் இன்டெர்நஷனல் (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 79582
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.06.23
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 165/1/ஏ1, பிரதான வீதி, கொழும்பு 11

அமல்கமேற்றற் மனேஜ்மென்ற் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11,
2011.06.27.

7-653

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : பிரீமியர் பெட் பொட்டல் (பிவிடி) எல்டிதி
கம்பனி இலக்கம் : பீவீ 79509
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.06.20
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 96/10, இரத்தினபுரி வீதி, அவிசாவளை

பிரீமியர் பெட் பொட்டல் (பிவிடி) எல்டிதி,
கம்பனி இயக்குனர்.

2011.06.21.

7-654

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, புத்தளம் மாவட்டம், பிடிகல் கோறளை வடக்கு, முன்னேஸ்வரம்பத்து, முகுனுவடவன தபால், மஹகம வடக்கு, இல. 168 என்ற முகவரியைச் சேர்ந்த மிஹிதுகுலசூரிய என்டன் விஜித் ஷிரன்தன் பிரனான்து, ராஜபக்ஷ முதலிகே லீலாங்கனி ஆகிய நாம் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. பேமவதியினால் 2010.01.01 ஆந் திகதியன்று அத்தாட்சிசெய்யப்பட்ட 4843 ஆம் இலக்கம் உடையதும் குருநாகலை, வடமத்திய, வடமேல் மாகாணம் வலய பதிவாளர் நாயகம் அலுவலகத்தின் அற்றோணி பதிவுப்புத்தகத்தின் 33 ஆம் இலக்க கட்டு புத்தகத்தின் 1822 ஆவது மடிப்புத்தாளில் 2010.04.05 ஆந் திகதிய தினப்புத்தக இலக்கம் 787 இன்கீழ் பதியப்பட்டதுமான அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலம் சிலாபம், கொரயா மாவத்தை, இல. 54 என்ற முகவரியைச் சேர்ந்த மிஹிதுகுலசூரிய ஷெராட் பிரியன்ஜன் லால் பிரனான்து (தே. அ. அ. இல. 652873219V) என்பவருக்கு நாம் வழங்கிய சகல தத்துவங்களையும் இன்றைய 2011.07.11 ஆந் திகதி முதல் இரத்துச்செய்து விட்டோம் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். மேற்கூறப்பட்ட மிஹிதுகுலசூரிய ஷெராட்

பிரியன்ஜன் லால் பிரனான்து இந்த அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளும் எவ்வித செயல்களும் இத்திகதி முதல் எம்மைக் கட்டுப்படுத்தாது என்பதை மேலும் அறியத்தருகின்றோம்.

மிஹிதுகுலசூரிய என்டன் விஜித்
ஷிரன்தன் பிரனான்து,
ராஜபக்ஷ முதலிகே லீலாங்கனி.

2011.07.11

7-617

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

9(2) ஆம் பந்தியின்படி பெயர் மாற்றம் சம்பந்தமான பொது அறிவித்தல்

ஜே பி பினான்சல் (பிறைவேட்) லிமிட்டெட்டின் முன்னைய பெயரானது ஜே. பி. பினான்சல் சேவிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி பதிவு இல. : பீவீ 18585)

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது, ஜே. பி. பினான்சல் சேவிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் முன்னைய பெயரில் இயங்கிய கம்பனி, அதன் பெயரை ஜே பி பினான்சல் (பிறைவேட்) லிமிட்டெட் என 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 8 பந்திக்கு அமைய 2011.07.05 ஆந் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்கம்பனியின் பதிவு விலாசம் இல. 150, சாந்த ஜோசப் வீதி, கொழும்பு 14 என்ற முகவரியில் தொடர்ந்தும் சேவையாற்றும் என்பதை அறியத்தருகின்றோம்.

ருவன் குமாரி,
கம்பனிச் செயலாளர்.

ஜே பி பினான்சல் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல. 150, சாந்த ஜோசப் வீதி,
கொழும்பு 14.

7-646

---

## அற்றோணித் தத்துவத்தை செல்லுபடியற்றதாக்குதல்

கெங்கல்ல, கொலொன்கஹவத்த, இல. 38 இல் வசிக்கும் சாகர விஸ்வனாத் விக்ரமஆரச்சி ஆகிய நான், கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி வை. எம். எஸ். வருணி யாபாரத்ன அவர்களினால் 2007 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 8 ஆந் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்ட 2418 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி பத்திரத்தினூடாக இல. 20, தேசிய வீடமைப்புத் திட்டம், ரஜவெல்லயில் வசிக்கும் ஓபாத ஜுலியன் ராலஹாமிலாகே தொன் தம்மிக பிரசன்ன படுவன்துடாவே என்பவருக்கு அற்றோணி தத்துவகாரராக கொடுக்கப்பட்ட அனைத்து அங்கீகாரத்தையும் 2011.07.30 ஆந் திகதி முதல் இரத்துச்செய்தும் அதிகாரமற்றதாக்கியும் உள்ளோம். அவ் அற்றோணி தத்துவகாரரால் இதன் பிற்பாடு மேற்கொள்ளப்படும் எந்தவொரு விடயத்திற்கும் என்னால் பொறுப்பு ஏற்கப்பட மாட்டாது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாகர விஸ்வனாத் விக்ரமஆரச்சி.

7-647

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : மெல்மேட் ஹொட்டெல்ஸ் அன்ட் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 79392
பதிவு முகவரி : இல. 280, டாம் வீதி, கொழும்பு 12

சபையின் பணிப்பின்படி,

பி. ஆர். செக்ரெடேரியல் சேவிசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

7-633

---

## அறிவித்தல்

தற்போது கம்பனி பட்டியல்படுத்தப்பட்ட "லங்கா ஒரிக்ஸ் பைனான்ஸ் கம்பனி லிமிட்டெட்" 2011, யூலை 7 ஆந் திகதி முதல் நடைமுறையில் "லங்கா ஒரிக்ஸ் பைனான்ஸ் பீஎல்சீ" என கம்பனியின் பெயர் மாற்றம் பெறப்பட்டுள்ளது என தெரியப்படுத்துகிறது.

சீ. எஸ். எமானுவல்,
கம்பனிச் செயலாளர்.

2011, யூலை 12.

7-691

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு சம்பந்தமான பகிரங்க அறிவித்தல்

கம்பனியின் பெயர் : மிலான் டுவர்ஸ் அன்ட் ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 79546

கம்பனியின் முகவரி : இல. 68/சி, முதலாம் மாடி, யடிநுவர வீதி, கண்டி

சட்டத்தரணி எம். எஸ். பைஸர் அலி,
செயலாளர்.

இல. 76/1, பங்களாவகெதர,
மடவலை பஸார்.

7-675

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : இன்டர் மார்க்கட் எக்ஸ்சேன்ஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79773
பதிவு முகவரி : இல. 14, ரீட் எவெனியு, கொழும்பு 7
பதிவுத் திகதி : 2011, யூலை 4

7-666

---

## விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தளை எம். சீ. வீதியில் இலக்கம் 115 இல் வதியும் வீரசேகர முதியன்சேலாகே அநுருத்த சாமின்த பண்டார வீரசேகர ஆகிய நான், மாத்தளை அலுவிகாரை ஸ்ரீ சரணங்கர மாவத்தையில் வதியும் கருணாரத்ன ஹேரத் முதியன்சேலாகே ஹேரத் பண்டா என்பவருக்கு 2009, ஒற்றோபர் 1 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு திரு. பீ. கே. ராஜபக்ஷ என்பவரால் அத்தாட்சிப்படுத்தி வழங்கப்பட்டிருந்த இலக்கம் 51 கொண்ட விசேட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன். இதன் பிறகு குறித்த கருணாரத்ன ஹேரத் முதியன்சேலாகே ஹேரத் பண்டா என்பவர் எனது சார்பாக மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் எவ்வித பொறுப்பாளியுமல்ல என்பதனை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீரசேகர முதியன்சேலாகே அநுருத்த
சாமின்த பண்டார வீரசேகர.

7-669

---

## அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

பிலியந்தல, பாசல் மாவத்தையில் உள்ள கெட்டவிலவத்தையில் இல. 2சீ இல் வசிக்கும் ஜயசிங்க முதியன்சேலாகே ஜயந்த எனும் நான், பிரசித்த நொத்தாரிசு மலிக் ஹன்சில் ஹனான் என்பவரால் 2004, யூலை மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சி செய்த இல. 3 உடைய அற்றோணி தத்துவப்பத்திரம் மூலமாக எனது சட்டபூர்வமான அற்றோணி தத்துவகாரியாக பிலியந்தல, பாசல் மாவத்தை, நிவந்திடிய, கெட்டவிலவத்தையில் உள்ள இல. 2சீ இல் வசிக்கும் மலவர ஆரச்சிகே லிலீ குணவர்தனா என்பவரை நியமனம் செய்த அந்த அற்றோணி தத்துவப்பத்திரம் இன்றிலிருந்து காலாவதியாக்கி இரத்துச்செய்து விட்டேன். அதன்படி மேற்கூறிய தத்துவக்காரியினால் செய்துகொள்ளப்படும் எவ்வித நடவடிக்கைக்கும் செய்கைக்கும் செல்லுபடியாகாது. அவ்விதமான நடவடிக்கைகள், கொடுப்பனவுகள் செய்துகொள்ளும் செய்கைக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஜயசிங்க முதியன்சேலாகே ஜயந்த.

2007.08.06.

7-694

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : யுனிவர்சல் சொப்ட்வெயார் சொலியூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 79122
பதிவுத் திகதி : 2011.06.01
பதிவு முகவரி : இல. 13, 3 ஆம் மாடி, ஐ. டீ. எச். கட்டிடம், டுப்ளிகேஷன் வீதி, கொழும்பு 3

டபிள்யூ. எஸ். பிரனாந்து,
கம்பனிச் செயலாளர்கள்.

7-770

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் தற்போது வத்தளை, தெலங்கபாத்த, மீகஹவத்தை வீதி, இலக்கம் 17/11 (முன்னர் உரும்பிராய்) இல் வசிக்கும் பத்மலோஜனி பொன்னுத்துரையாகிய நான், கந்தர்மடம், பலாலி வீதி, இலக்கம் 218/1 இல் வசிக்கும் ஜெயலட்சுமி தலயசிங்கம் (திருமணத்துக்கு முன் பொன்னுதுரை) என்பவருக்கு வழங்கப்பட்ட, கொழும்பு சட்டத்தரணி மற்றும் பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஆர். டீ. கனகரத்தினம் என்பவரது இலக்கம் 2465 மற்றும் 1997.06.29 ஆந் திகதிய அற்றோணி தத்துவத்தை இத்துடன் செல்லுபடியற்றதாக்கி இரத்துச் செய்வதோடு வலுவிழக்கச் செய்வதாகவும் இத்துடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்துடன் அறியத்தரப்படுகின்றது.

பத்மாலோஜனி பொன்னுத்துரை,
(தே. அ. அ. இல. : 506860261V).

2011.07.14.

7-731

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

குருநாகல், வெஹர, கம்மடுகொல்ல மாவத்தை, இல. 21/2 இல் வசிக்கும் வர்ணகுலசூரிய தெரேசா மாலனி பெர்னாந்து ஆகிய என்னால் கே. ஏ. டி. பி. குருப்பு பிரபல நொத்தாரிசு அவர்களால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட இல. 1391 மற்றும் 2008.12.03 ஆந் திகதியைக் கொண்ட அற்றோணித் தத்துவத்தின் அடிப்படையில் எனது அற்றோணியாக குருநாகல், வெஹெர கம்மொடுகொல்ல மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட ஜயந்த டீ சில்வா அபேவீர குணசேகர என்பவரை நியமித்து இருந்ததுடன் அந்த அற்றோணி தத்துவத்தை இன்று இரத்துச்செய்துள்ளதாகவும் மேற்குறிப்பிட்ட ஜயந்த டீ சில்வா அபேவீர குணசேகர அவர்கள் இன்று முதல் செய்கின்ற எந்தவிதமான செயற்பாடுகளுக்கும் எந்தவிதமான பொறுப்புமில்லை என்றும் இலங்கைவாழ் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வர்ணகுலசூரிய தெரேசா மாலனி பெர்னாந்து.

7-734

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகை விற்பனை - 2012

1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் அதன் பிறகான காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை சட்டதிட்டங்களுக்கு அமையவும், இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது விற்பனைவரி சட்ட திட்டங்களுக்கு அமையவும், மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்காக தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபரான என்னால் 2011.08.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்வியிலும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பப்படிவம் தயார் செய்யப்பட வேண்டுவதுடன்,

(அ) கேள்வி முற்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திடமான கேள்வி பிணைத் தொகையை வைப்பில் இட்டு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்வியாளரின் சொத்துக்கள், அவை அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படவேண்டுமென்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிகக்கடுமையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்வியாளர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) கேள்விப்பத்திரத்தை முழுமையாக பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும்போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுத வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப்பத்திரத்தில் சாட்சியாளரின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும் ;

(iii) மாற்றங்கள் செய்யும் அனைத்திலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்வியாளரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தியிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்கு முரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. முறையாக முன்வைக்கப்படுகின்ற கேள்விப்பத்திரம் :

(அ) பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு :

(ஆ) சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி.

ஆகியவற்றுடன் கடித உறையொன்றிலிட்டு முத்திரையிட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''தவறணை இலக்கமும் பெயரும்'' குறிப்பிடப்பட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைவதற்கு முன்னர் இடப்படவேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தெல்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்வது முடிவடையும் நேரம் மேலே குறிப்பிட்டுள்ள 1 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்வியாளர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

6. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்வியாளர் ''சிறப்புரிமைகளை வாங்கியவர்கள்'' என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக

தெல்தொட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிட வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 'கொடுப்பனவுக்காக' குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட 'பாதுகாப்புக்கான காசோலை' என அழைக்கப்படும் காசோலை ஒன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக (பீப்பாய்க்கணக்கில்) கள்ளுக்குடி வகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற்கொள்ளவும்.

8. தற்போது வெளிநாட்டு மதுபான விற்பனை செய்யும் குறிப்பிட்ட இடத்தில் தொடர்ந்தும் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பிரச்சினைகள் அற்ற பொருத்தமான இடத்தை தெரிவுசெய்வது குத்தகைக்காரரின் கடமையாகும்.

9. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்றதாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடிவிடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

10. அதற்கு முன்னர் வெளிநாட்டு மதுபானசாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

11. மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தெல்தோட்டை.

*அட்டவணை*

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அனுமதியளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணை பட்டியல் - 2011**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபானசாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை கரகஸ்கட வடக்கு கிராம சேவகர் பிரிவிற்குள் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரையும் பி.ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2011.08.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்கான சேமிப்பாக வைக்கப்படவேண்டிய தொகை ரூபா 1,000 ஆகும்.

7-620

---

**சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் அந்நிய மதுபானத் தவறணை குத்தகை விற்பனை - 2012**

2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட கடித உறையில் இடது பக்கத்தில் தவறணையின் பெயரும், இலக்கமும் பின்வருமாறு -

"......................................... இலக்கம் கொண்ட ......................................... அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2011.08.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் மேற்குறித்த நேரம், திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.03.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைய வேண்டும்.

5. 2011.08.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2011.09.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள்விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 7, பிடிபன தெரு, சிலாபம் | 2011.08.04 மு. ப. 10.30 | 2011.09.29 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 500 |
| சிலாபம் | இல. 6, பிடிபன தெரு, சிலாபம் | 2011.08.04 மு. ப. 10.30 | 2011.09.29 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 05.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,500 |

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2011.06.24.

7-640

# ஏல விற்பனைகள்

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெதபற்று, பண்டியாமுல்லையில் அமைந்துள்ளதும் "தெல்கஹ துன்ஹவுல் குருந்துவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் கே.கே. வருண அஜந்தா யாப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005.03.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 845 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டது மான காணியினது)**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 19.50பே.)**

**ஏல விற்பனை**

(திசுரா லங்கா மோட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. கே. என். பீ. வித்தான அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006.05.08 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 7690, 2005.10.10 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 7155 மற்றும் 2005.06.16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 6859

*ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2010.08.18 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கம்பஹா நகரிலுள்ள பிரதான அரச போக்குவரத்து நிறுத்தத்திலிருந்து மிரிஸ்வத்தை சந்திக்கு இட்டுச்செல்லும் கொழும்பு வீதி வழியே கொழும்பு-கண்டி வீதியில் ஏறக்குறைய 400 யார் சென்று, விஜய வீதிக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 400 யார் சென்று, தாரிடப்பட்டு கோலிகள் பிடிக்கப்பட்ட வீதிக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 50 யார் செல்ல விற்பனைக் குரிய இவ்வாதனம் வீதிக்கு வலப்பக்கத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2010.09.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2010.09.10 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை காசாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக் கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) மற்றும் அதேபோன்று பெ. சே. வ. கட்டணங்கள் ;

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் ) ;

(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும், "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க, சிரேட்ட முகாமையாளர் - சட்ட சம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 2565573, 2565565.

சிறியாணி மனம்பேரி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
தரகர் மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர் .

'எம். எஸ். ஒக்ஷன்ஸ்',
இல. 9, பெல்மொன்ட் தெரு,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2320074, 0713-151356.

7-749

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – தங்கொட்டுவை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

**பன்னல பிரதேச சபை மாகந்துர உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஹெதியகல கிராமத்தில் அமைந்துள்ள சியம்பலாமுலகஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. நவரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.12.07 ஆந் திகதிய 4943ஏ ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட காணித் துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.**

**(விஸ்தீரணம் : 1றூ. 13.33 பேர்ச்சஸ் (53.33பே.)**

*(இவ்வாதனம் ஹேரத் முதியன்சேலாகே விஜயரத்ன மற்றும் ஹேரத் முதியன்சேலாகே மதூஷா சமாதி ஹேரத் ஆகியோர் கடப்பாடுடையவர் களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்.**- தங்கொட்டுவை மணிக்கூட்டு கோபுர அருகிலிருந்து பன்னல பாதையில் சுமார் 7.7 கி. மீ. தூரம் வந்து சந்தலங்காவ சந்தியில் வலதுபக்கமாக திரும்பி தம்பகந்த பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாக திரும்பி சுமார் 1 கி. மீ. தூரம் விலகெதர பாதை தென்படும் மணற்பாதையில் சென்று வலதுபக்கமாக திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் விஜயரத்ன ஓட்டு தொழிற்சாலை பாதையில் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலதுபக்கமாக அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2011.08.15 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2009.12.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2010.01.13 ஆந் திகதிய "த ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனையாளரிடம் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்கு பத்து) ; பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும் ; ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ; நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000 ; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ; சகல பகிரங்கப்படுத்தல் செலவு. கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இல் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்கவேண்டி ஏற்படுவதுடன்

இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661816.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வடபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974.
பெக்ஸ் இல. : 081-2211025.

7-712

---

**ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. – அளுத்கமை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

*(பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. வீ. என். டபிள்யூ. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2008, செத்தெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 2533 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவர்களான வெத்தமுனி கமல் ஹேமந்த டீ சில்வா மற்றும் தெமுனிநிம்மி டீ சொய்சா ஆகியோரால் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு ஈடுவைக்கப் பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் கீழே விவரிக்கப் பட்டுள்ள ஆதனத்தை 2011, ஓகத்து 19 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2009.08.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.12.03 ஆந் திகதிய ''ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை தெற்கு, அளுத்கமை பெத்த களுத்துறை பிரதேச சபையின் மலேவன்ன பத்த உப அலுவலக எல்லைகளுக்குள் மொறகல்லவில் அமைந்துள்ளதும் ''பஞ்சிபெலவத்தை மற்றும் உஸ்வத்தை'' என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். லியனகே லியோன்செட் அவர்களால் தயாரிக்கப்பட்டு, 2008.05.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 118/2008 இல் குறிப் பிடப்பட்டு துண்டு பி என அடையாளமிடப்பட்டுள்ளதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை

(விஸ்தீரணம் : பதினெட்டு பேர்ச்சுக்கள்
(0ஏ. 0றூ. 18பே.))

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- பேருவளை நகர் மத்தியிலிருந்து காலி வீதி வழியே ஏறக்குறைய 4.5 கி. மீ. செல்ல இடப்பக்கத்திலுள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை (பாபேரியன் ரீவ் ஹோட்டலுக்கு இட்டுச்செல்லும் வீதி என 6 ஆவது ஒழுங்கைக்கு எதிரே) அடையலாம்.

